**இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.**

**பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் – 290**

**மாவட்ட செயலகம் – ஹம்பாந்தோட்டை**

**முதலாம் பகுதி:79.00**

| | அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | வாகனங்களைப் பட்டியலிடும் ஆவணம் உரியவாறு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை | உத்தியோகத்ர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி ஆவணங்களை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | தற்போது ஏற்புடைய ஆவணங்கள் இற்ற்றைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 02 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படவில்லை. | மாவட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் மற்றும் பிரதேச செயலாளர்களின் கலந்துரையாடலின் போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அதன் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்க முடியுமானவாறு தேவையான தகவல்களை விரைவாக வழங்குமாறு பிரதேச செயலகங்களுக்கு மற்றும் ஏனைய நிறுவனத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது | மாவட்ட செயலகத்தினால் மாவட்டத்தின் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நிறைவேற்றப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக தற்போது அந்த நிறுவனங்கள் ஏற்புடைய தகவல்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. ஆயினும் தற்பொழுது கணக்காய்வு ஐய வினாக்கள் கிடைக்கப் பெற்றவுடன் துரிதமாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |
| 03 | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்காக ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கை இடப்பட்டுள்ளது. | ஏற்புடைய கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழுவில், பிரதேச செயலாளர்களின் கலந்துரையாடல் மற்றும் கணக்காளர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் மாவட்ட செயலகத்தின் ஏற்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் சகல பிரதேச செயலகங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தற்பொழுது உள்ளக கணக்காய்வு ஐய வினாக்கள் கிடைக்கப் பெற்றவுடன் துரிதமாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |
| 04 | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 பந்தி 11.1 இல் குறிப்பிடப்பட்ட கால எல்லைகுள் நி.பி.756(6) பிரகாரம் பொருள் கணிப்பீடு மேற்கொண்டு உரிய திகதியில் ஏற்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்புடைய அறிக்கையினை உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | 2022 ஆம் ஆண்டுக்கான பொருள் கணிப்பீட்டு அறிக்கை 2023.06.15 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டிலும் உரிய திகதிக்கு முன்னர் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| 05 | அரச வாகன விபத்துக்கள் தொடர்பில் நி.பி. 103, 104 மற்றும் 110 பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அரச வாகன விபத்துக்கள் தொடர்பில் நி.பி. பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டு நிலவிய பிரச்சினைக்குரிய கோப்புக்கள் சிலவற்றைத் தவிர ஏனைய அனைத்து கோப்புக்களினதும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது வாகன விபத்தக்கள் தொடர்பில் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கின்றேன். |
| 06 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்துக்குரிய வாகனங்களின் எரிபொருள் விரயம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | தற்பொழுது குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் விரயப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 07 | அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை நிறம் தீட்டப்படவில்லை. | அரச இலட்சினைகள் முன்பு வாகனங்களுக்கு நிறம் தீட்டப்ப் போதும் அது அழிந்து போனதன் காரணமாக மீண்டும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மாவட்ட செயலகம் மூலம் நிறம் தீட்டும் பணிகள் தொடர்பில் உரிய நவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 08 | நி.பி.94 (1) பிரகாரம் செலவு விடயம் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லையைத் தாண்டிய விதமான பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தன | எதிர்காலத்தில் ஒதுக்கீட்டு எல்லையைத் தாண்டி செலவுகள் மேற்கொள்ள வேண்டாமெனவும் ஒதுக்கீட்டு எல்லைக்கு உட்பட்டு செலவுகளை முகாமை செய்யுமாறும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | - |
| 09 | நி.பி.371 பிரகாரம் வெளியிடப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால முற்பணப் பணிகள் நிறைவடைந்து 10 தினங்களுக்குள் தீர்க்கப்படவில்லை. | அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டளவில் வெளியிடப்பட்டுள்ள அனைத்து குறித்தொதுக்கப்பட்ட பணிகளுக்கான இடைக்கால முற்பணங்களை குறித்த கால எல்லைக்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 10 | அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு மீதிகள் திறைசேரியின் புத்தகங்களுடன் காலாண்டு ரீதியில் ஒப்பீடு செய்யப்படும் முற்பண இணக்க கூற்று உரிய திகதிக்கு முன்னர் திறைசேரியி செயற்பாட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்புடைய TOD/IMP/05 மாதிரிப் படிவத்தை குறித்த திகதிக்கு முன்னர் அனுப்புமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டளவில் உரிய திகதிக்கு அறிக்கை அனுப்புதல் மேற்கொள்ளப்படுகிறது. |
| 11 | 2017.09.20 ஆம் திகதிய 04/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் பணியாட்தொகுதியினர் பற்றிய தகவல்கள் காலாண்டு நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் ஒரு காலாண்டு நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் ஏற்புடைய தகவல்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நடைமுறை ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு பணியாட்தொகுதியினர் பற்றிய தகவல்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். |

இரண்டாம் பகுதி:79.00

| | | | |
|---|---|---|---|
| 01 | ஒட்டுமொத்த பணியாட்டொகுதி உள்ளடங்களாக செயலாற்றுகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமோத்த பணியாட்தொகுதியுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டு அனைத்து உத்தியோகத்தர்களும் செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்கள் |
| 02 | நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் பொருத்தமற்ற அல்லது பாதக நிலையில் காணப்பட்டது | 2021 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பொருத்தமற்ற அல்லது பாதகமான நிலைமை என அபிப்பிராயம் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் அது முனைப்பழியுள்ள ஒரு அபிப்பிராயமாக வழங்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டிலும் முனைப்பழியுள்ள ஒரு அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. |
| 03 | இனம் காணப்பட்ட குறிகாட்டிடை அடைதல் 24% இற்கும் குறைவாக காணப்பட்டது. | இனம் காணப்பட்ட குறிகாட்டிடை அடைதல் 68% சதவீதமென இனம் காணப்பட்டுள்ளது. | - |
| 04 | திட்டமிடப்பட்ட பயிற்சிச் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% சதவீதத்தை விடவும் குறைவாக காணப்பட்டது | 2021 ஆம் ஆண்டு நிலவிய கொவிட் தொற்று நோய் காரணமாக உத்தியோகத்தர்களை வரவழைத்து பயிற்சிப் பாடநெறிகளை நடாத்த முடியவில்லை. | தற்போது ZOOM தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மற்றும் மாவட்ட மற்றும் பிரதேசசெயலக மட்டத்தில் பயிற்சி சந்தர்ப்பங்கள் மேற்கொள்ளப்படுகிறது. |
| 05 | அனைத்து உத்தியோகத்தர்களாலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டு நிலவிய கொவிட் தொற்று நோய் காரணமாக உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியவில்லை என்பதுடன் அதனை 2022 ஆம் ஆண்டு முதல் சரியாக நிறைவேற்றுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டு முதல் அனைத்து உத்தியோகத்தர்களாலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரம் சரியாக சமர்ப்பிக்கப்படுகிறது. |

H.P. Sumanasekara
District Secretary/Government Agent
Hambantota.

எச்.ஜீ.சுமனசேகர,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர், 2024 · 04 · 30
ஹம்பந்தோட்டை நிர்வாக மாவட்டம்

W. L. Geethika
Cheif Accountant (Acting)
District Secretariat
Hambantota.

டப்.எல்.கீதிகா,
பிரதான கணக்காளர் (ப.கடமை), 2024 · 04 · 30
மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்